அமரர் ரோஜா முத்தையா

எட்டாம் ஆண்டு நினைவு வெளியீடு

உடையவர்

திரிலோக சீதாராம்

இயற்றியது

The Lord - Owner An English Version by

Sekkizhaar Adi-p-Podi

T.N. RAMACHANDRAN

Off-print

THE SCHOLAR MISCELLANIST

THANJAVUR - 9.

TRANSLATIONS (10)

உடையவர்

திருலோக சீதாராம் இயற்றி அருளியது

The Lord-Owner

Written by **Tiruloka Sitaram**

(Translated by **Sekkizhar Adi-p-Podi Siva Sri T.N. Ramachandran**)

Tiruvaiyaru Lokanatha Iyer Sitaram was born on 1 April 1917. He lost his father when he was only three years old. He had to give up his education when he was a student of third form. However he had the good fortune to secure the great poet Ramaswamy Padayacchi, who was born blind, as his teacher. Thanks to the grace of his teacher, and his own amazing retentive power, he acquired an extraordinary valiancy in Tamil. He also acquired commendable knowledge in English. He knew all the poems of Maha Kavi Bharati by rote. He could recite them for hours on end without let or hindrance, and thrill his audience. Truly speaking he was the spiritual son of Bharati. He also earned the love and affection of Bharatidasan.

Tirulokam started his life as a journalist, when he was eighteen years old. He was the editor of **"Indiya Vaalipan"**, **"Bala Bharatam"**, **"Aarkaadu Dhoothan"** and **"Graama Oozhiyan"**. Eventually he became the editor of **Shivaji** and conducted the journal for over twenty five years. He founded the **Deva Sabha** which exercised itself in explicating the **Upanishads.** He passed away on 23 August 1973.

Tirulokam was a poet **sui generis**. He translated into Tamil Herman Hesse's **SIDDHARTA** and Manu Dharma Sastra. He authored a series of essays and these were published in a book


form called **Ilakkiya Pataku.** Its reprint appeared a few weeks ago. **Gandharva Gaanam** is the title of his collected poems. Its reprint is now available. His essays were translated into English by Prof. K.G. Seshadri and his poems by Tiru. T.N. Ramachandran.

Udaiyavar is one of his magnificent poems. Its theme is disarmament. The conductor of the Great War of Bharat was truly Krishna. He conducted it, concluded it, and eventually confiscated the ommipotent weapons. **Udaiyavar** narrates an episode of the post war period of the **Maha Bharata.** Lord Krishna is the maker of both war and peace.

Sekkizhar Adi-p-Podi Sri T.N. Ramachandran, the translator of this poem, is a leading advocate and an authority in Saiva Siddhanta. He has, by the grace of Grace, translated the entire Periya Puranam of St. Sekkizhaar's, and has thus justified the title conferred on him, namely : **Sekkizhaar Adi-p-Podi.** He has translated the works of Bharati. He was closely associated with Tiruloka Sitaram and **'Shiva'**. His private library is a valuable treasure house of ancient and modern books - a treat for serious-minded researchers.

He is like Dr. Johnson, a literary giant. It is a sight to see him surrounded by enthusiastic scholars, young and old listening to his expositions on many abstruse passages in Upanishads and Saiva Siddhanta. **'The Scholar Miscellanist'** is proud to publish his contribution, a translation of Tiruloka Sitaram's **Udaiyavar** in this number.

(S.R.)



உடையவர்

(மகா பாரதப் போர் முடிந்து நெடுங்காலத்துக்குப் பின் இந்திரபிரஸ்த நகரில்)

*மாபா ரதம்முடிந்து மன்னர் பகைமுடித்துப்
பூபாரம் தீர்த்துப் புயல்வண்ணன் கோபாலன்
வந்தவழி மீண்டே வளமார் துவாரகையைச்
சொந்த மெனக்கொண்டான்; சோதரர்கள் தாம்பொருத
போர் ஆர்வம் ஓய்ந்து, புகைஉயிர்த்த நெஞ்சத்து
வீரர் தமைத்தாமே வீழ்த்தி அழிவுற்று
எஞ்சியதோர் மாநிலமும் ஏறும் அரியணையும்
பஞ்சம் பசிபிணியும் பாரதப்போர் வென்றியினால்
சூடியதோர் வாகை சுடுநெஞ்சம் கொண்டவனாய்
வாடாத நல்லறத்தின் வாழ்வுக் கொருபுகலாய்
இந்திரமா நன்னகரில் ஏய்ந்த முடிசூடிச்
சந்ததமும் கண்ணனடி சார்ந்த மனத்தருமன்*

UDAIYAVAR

(In the city of Indraprasta, many years after the end of the Great War of Bharat...)

*After the end of the Great War of Bharat
And the termination of hostilities among kings,
The nimbus-hued Gopalan that did away
With the burthen of the earth, returned
To the uberous Dwaraka and there abode for good.
The martial ardour of the brothers who erewhile fought
Abated; the heroes whose hearts
Were pervaded by the smoke of hostility,
Caused their own downfall and perished.
An immense state that survived,
A throne to rule from, famine, hunger and disease
And a heart singed by 'the Garland of Victory'
That was worn to proclaim the triumph
In the Great War of Bharat*

Were the inheritance of Dharma-- The Refuge
Of fadeless and lofty dharma--;
He whose heart was for ever linked to the feet
Of Kannan had been fittingly coronated
In the great and goodly city of Indraprasta.

தம்பியரின் தோள்வலியும் தான்செய் தவவலியும்
நம்பி யரசிருந்த நாளையிலே, யாழ்பாடும்
பாணனும் பத்தினியும் பாரதர்க்கு வேந்தர்தமைக்
காண விரும்பியுவர் கால்நடையாய் வந்தடைந்து
ஆசார வாசல் அணுகினார். அவ்வேளை
ஓசை மணிமுரசம் ஓங்கியெழ வாழ்த்தொலித்துச்
சங்கம் முழங்கச் சதுரங்க சேனைகளும்
பொங்கி அணிவகுத்துப் போவதுவும் முந்துவகை
மங்கலங் கள்பாடி மாதர் மணிவிளக்கம்
அங்கை எடுத்துவர, அந்தணர்கள் கும்பங்கள்
ஏந்திவர எங்கும் எழுந்தார வாரமுறப்
பூந்தோரணம் கொஞ்சும் பொன்னகரின் வீதியெலாம்
கண்டு வியந்தார் கழிபேர் உவகைக்குக்
காரணமேன் என்றவரும் கருதினார்.

During a certain day of his reign for which
He hopefully depended on the valorous arms
Of his brothers and his own prowess of tapas
A paanan--the strummer of yaazh--,
And his chaste wife, desiring to behold the sovereign
Of the subjects of Bharat, came on foot,
And arrived at the royal vestibulum.
At that hour, the sound of stately drums
Soared aloft; conches blared benediction;
The fourfold army marched in battalions.
Damozels singing auspicious hymns, moved on
Holding in their palms rubied lamps;
Brahmins carried with them holy pots.
There was everywhere a jubilant uproar;
The streets of the golden city were decked

With flowers and festoons.
These they beheld in wonder.
"What may the reason be for this
Great and grand jamboree?"
Thus they thought.

(வெற்றிவிழா ஊர்வலம். ஜனக் கூட்டம் வெள்ளமாகப் பெருகி ராணுவ அணிவகுப்பைத் தொடர்ந்து செல்லுகிறது.)

கொட்டுபேரி கொட்டுபேரி
கொட்டுபேரி கொட்டடா!
எட்டுகின்ற திசைகள் எட்டும்
எதிரிலா வலத்தினால்
கொட்டுபேரி கொட்டுபேரி
கொட்டுபேரி கொட்டடா!

மட்டிலாத புகழ் மணக்க
மண்டலத்து மன்னர்கள்
கொட்டுகின்ற திரைகள் கொண்டு
குடை நிழற்றும் கோமகன்
தருமமே தழைத் துயிர்த்த
தருமபூபன் ஆட்சியில்
பெருமை கொண்ட நாளிதென்று
பெரியபேரி கொட்டடா!

கொட்டுபேரி கொட்டுபேரி
கொட்டுபேரி கொட்டடா!

(The triumphal procession. The crowd of people swell like a flood and follow the battalions.)

Beat the drum, beat the drum,
Oh, beat the drum, do beat it aloud!

In immatchable valour
And in all the extending directions eight,
Beat the drum, beat the drum,
Oh, beat the drum, do beat it aloud.

Canopied by the royal umbrella
He, the king, doth reign, receiving tributes
Poured by the kings of realms;

The fragrance of his glory wafts and wafts.
Beat the great drum and say:
"This is a glorious day,
In the reign of King Dharma
Whose reign doth thrive with life infused."

Beat the drum, beat the drum,
Oh beat the drum, do beat it aloud.

(பாணனும் விறலியும் தங்களுக்குள்)

--பாணீ நாம் இன்றைக்குப் பாக்கியமே செய்தோம்!
--பாணா நாம் செய்திருக்கும் பாக்கியம்தான் என்னே?
--புல்லியரைப் போர்வென்று பொன்மகளின் கூந்தல்
வில்லாளர் முடித்திட்ட வென்றிதிகழ் நன்னாள்!
--வில்லாளர் வில்லுக்கும் வேகம் அளித்திட்ட
மெல்லியலின் கற்பனலே மேன்மையென்று கூறு!
--காண்டீபன் வில்வலியால் காய்ந்தபகை பெரிதே!
ஈண்டவனின் புகழ்மணக்கும் இனிய திருநாளாம்!
--தூண்டியதோர் தேர்நடத்தித் தூதுரைத்து மற்றை
வேண்டுவன செய்தளித்தான் வித்தகத்தைப் பேசு!

(Between the Paanan and his wife)

--Beloved, we have this day, wrought an act of fortune!
--Dear one, what may that act of fortune be?
--This is the day of triumph when the lords of archery
Who, having quelled the base in the war,
Braided and tied the hair of the golden damsel.
--Declare that it is the flame of her chastity--
The one of soft mien--, which with puissance
Infused the bows of the lords of archery. Hail her glory!
--Innumerable are the foes quelled by the prowess
Of Gaandivan's bow! This indeed is the day
When his glory breathes as fragrance.
--Descant on his strategy who plied as messenger,
Drove the chariot and conferred
Whatever was sought.

--வீமனெனும் மாமதத்து வேழம் ஒன்றிங் குண்டே?
--ஆம் அவனின் கதைவலியும் ஆண்டவனின் அருளே!
--சத்தியமெய்ஞ் ஞானசகா தேவனெனும் மேலோன்?
--முத்தியெனுங் கொடுமுடியில் முறுவலித்து நிற்போன்!
--நகுலனெனும் நற்குணத்து நம்பியவன் பெருமை?
--மிகுநேமம் காத்துயர்ந்த மேன்மையினால் பாணா!
--ஐவருக்கும் தலையானான் அறமுதல்வன் சீர்த்தி?
--உய்வகையே தானுணர்ந்தான் ஒச்சுவதே செங்கோல்!

--Isn't here a mighty, musty mammoth hight Bhima?
--Yes, the puissance of his mace is God's own grace!
--What of Sahadeva--the one of aeviternal gnosis?
--Lo, he smiles enthroned on the very peak of Mukti!
--What about the glory of the goodly and virtuous Nakulan?
--O Paana, it is thanks to the observance of his rites
And rituals which ushered in his elevation!
--What about the ever-crescent glory
Of the Lord of dharma--the head of the Five?
--Lo, he has gained salvific illumination;
His indeed is the righteous sceptre!

--தாழ்விலாக் கொடை தரும பூபனின்
தண்குடை நிழல் கூடுவோம்.
--யாழ்நரம்பிசை மீட்டுவோம் புகழ்
பாடி யாடுவோம் பாண கேள்!
--நன்று கூறினை நாயகீ உளம்
நான் மறுத்திடல் ஒண்ணுமோ?
--நின்று நேருறக் கண்டு செல்லுவோம்
நேம மிக்கவன் மெய்ப்புகழ்!
--சென்ற நாட்களின் செய்தியும் இனிச்
சேரு நாட்களின் மீதியும்
--நன்றுநாமிருந் தாய்குவோம் பின்னர்
நமது பாட்டை நடக்கலாம்.

--Let us gather in the shade of king Dharma's
Cool umbrella that never droops!
--O Paana, let us strum the musical strings
Of the Yaazh and sing and dance!
--Well spoken, my consort! can I go against

What your heart bids?
--Here will we abide and witness all;
Lo, the glory of the one of exceeding askesis!
--The happenings of the days past and those
That will manifest in days to come:
--Them let us scan, here abiding,
And then shall we wend our way!

(புதியவர்களான பாணனையும் விறலியையும் வாயில் காப்போன் தடுத்தல்)

--யாரது? நிற்பீர், யாவரோ நீவிர்?
--பாரதம் சுற்றும் பாதசாரிகள்
--யாழ்அது என்ன? அருங்கலை வாணரோ?
--ஏழிசை வல்ல யாழிசைப் பாணர் யாம்.
--நல்வரவு உமக்கே. நாட்டின் திருநாள்.
மல்லரும் வில்லரும் மாகவி வாணரும்
பாண்டவர் முன்றில் பரிசில்கள் பெற்று
மீண்டவர் செல்லும் மேதகு நாளிது.
--அறிந்தோம் அய்யா அகமகிழ் கின்றோம்
குறிப்பாய் - முதலில்--குருக்ஷேத் திரத்தில்
வில்கை நழுவ வெலவெலத் திருந்த
கல்லெனும் திண்டோட் காண்டிவன் என்னும்
மன்னரைக் கண்டு மகிழ்ந்திட விருப்பம்.

(The doorkeeper prevents the entry of the Paanan and his wife)

--Who are ye? Stop. Who may you be?
--We are the itinerants of Bharat.
--Is that a Yaazh? Are you a minstrel?
--We are Paanas well-versed in sevenfold music.
--I bid you a warm welcome. This day is a festive day;
Wrestlers and bowmen and great poets too
Receive prizes in the court from the Paandavas
During this honoured day and then to their places return.
--Of this we know and feel inly delighted.
In particular and first of all, we in joy desire
To behold Arjuna of rocky shoulder who
At Kurushetra stood quaking,
His bow having slipped from him.

--என்ன துணிச்சல்? ஏளனம் புரியும்
இறுமாப்புடனே இங்கு நீர் வந்தீர்?
--குறைபட ஏதும் குறித்திலோம் அய்யா.
குற்றம் என்றால் பொறுப்பீர்; கோமகன்
சுற்றம் கொல்லத் துணிவிலான் ஆகி
நின்றதால் அன்றோ நீதியால் கண்ணன்
நன்று தன் நாவால் நல்லுரை வழங்கவும்
பாரத ஞானப் பழம் எனும் கீதையாம்
சார மெய் ஞானச் சாத்திரம் கண்டது?
--போற்றினும் போற்றுவீர்... ... ...
--... ... ... பொருள் கொடா விடினும்
தூற்றுவோம் மெய்ப்புகழ் தோய்ந்தவர் மாண்பை.
--பாணரே பொறுப்பீர்; பார்த்தனாம் வேந்தர்க்
காண விழைந்தீர் காதலால்; ஆயினும்;
--ஆயினும் தடையேதும் அடியேற் குளதோ?
--ஐய தடையிலை; ஆயினும் பாண்டவர்
மெய்யுயிர் என்ன மேவிடும் விசயன்
மெய்யாய் ஈங்கிலை... ....

--What effrontery is this? Have you come here
Borne by hauteur to indulge in derision?
--We haven't adverted to any flaw;
If our words offend, please bear with us.
Is it not because of his lack of will to kill
His kith and kin, he stood nonplussed?
*Is not for this, prompted by **niti,***
Kannan spake to him with his own tongue
*Goodly words which blessed us with **the Gita--***
The very fruit of Bharat's wisdom,
The quintessential sastra of true gnosis?
--Lo you may praise if you so choose...
--... ... Even if we are not rewarded, we will yet
Hail the majesty of them that are poised in true glory.
--O Paana! wait. In love you came here, desiring
To behold prince Arjuna; yet ... ...
--Yet, is there aught to bar me -- the servitor?
--Sir, there is no bar; yet, in sooth, Arjuna--
The true life of the Paandavas --, isn't here.

---... ... ... மேவியது எங்கோ?
---பாரத வெம்போர்ப் பகையழித்திட்ட
சாரதி தன்னூர் மீண்டபின் ஆங்கே
யாதவர் கலாம் விளைத் திட்டே தம்முள்
பேதமுற்றவராய்ப் பிழைபல புரிந்தார்.
--புரிந்ததால் ... ...
--... ... துவாரகா புரிக்கு வருகென
விரைந் தொரு தூது விடுத்தனன் கண்ணன்
-- யாதவர் பிணக்கை அறுக்கவும் மற்று
மாதவன் கண்ணன் மகிழ்ந்திடப் புரியவும்
என்றே மன்னரும் எய்தினர் கொல்லோ?

--Where has he gone?
--After Krishna--the Charioteer who quelled
The foes in the cruel war of Bharat--,
Returned to his city, the Yaadhavas indulged
In internecine insurrections and getting
Estranged from each other, committed offences galore.
--What of that?
--Kannan sent a messenger bidding them
Come to Dwaraka.
--Is it to put down the insurrections of the Yaadhavas
And make Madhava Kannan happy
That the princes had thither gone?

--நன்றே சொன்னீர். நாயகன் அழைப்பால்
சென்றுளார் பார்த்தனும் செயம் பெறுவீமனும்;
திரும்பிடச் சின்னாள் செல்லும் ஆதலால் ...
--விரும்பிய விருப்பம் வீணெனச் சொன்னீர்.
--பாணரே நன்கு பகர்ந்தீர் உண்மை.
காணநீர் வந்த காலமும் இனிதே.
வென்றி விழாவை வியந்து நீர் பாடி
நன்றே பரிசில் நயந்து நீர் செல்வீர்.

--You spoke aright. At the invitation of the Lord,
Arjuna and triumphant Bhima
Had gone there; a few days should roll by
Before they could return; so ... ...
--You say that the wish we wished is infructuous.

--O Paana, you spoke well the truth.
Your coming here to behold them is well-timed.
Hail the Triumphal Day in wondrous songs,
Secure the guerdon and go back well-pleased.

(பாணன் தனித்து விறலியிடம்)
அதுவா செய்தி? அப்படி யானால்
இதுவும் கண்ணன் இயற்றுமோர் கபட
நாடகம் கண்டாய் ... ...
... ..., நல்லது பாணா
பூடகம் இதனைப் பொறுத்து நாம் இருந்து
மேலும் காணலாம். ... ...
... ... மெல்லியல் வாராய்.

என்றினைய சிந்தித்து ஏழிசையாழ்ப் பாணர்
எழில்நகரின் வலம் வந்தார். எங்கெங்கும் சுற்றி;
மன்றார நிறைந்தபெரு மன்னவரும் மற்றை
மந்திரிமார் அந்தணரும் மாசனமும் சூழக்
குன்றொளிரும் சுடரென்னக் கொலுவிருந்த தருமக்
கோமகனின் வாசலினைக் கூடிவரும்போது
நின்றுநெடு வீதியினில் நேரிழையார் இருவர்
நிமித்திகங்கள் கூறிவரும் நேர்த்தியினைக் கேட்டார்.

(The Paanan whispers to his wife)

--Is that indeed the truth? If so, this too
Is a deceptious farce which Kannan enacts.
--Well, Paana, let us tarry and more closely
Witness this riddling play.
--O soft me, come.
Thus thinking, the minstrels of sevenfold music
Went round the beautiful polis; when they were
About to arrive at the royal threshold
Leading to the court of Dharma who blazed
Like a hill of light and who was surrounded
By ministers, brahmins, citizens great
And princes who filled the hall,
They witnessed the excellence of auguries
Announced by a pair of bejewelled women
Who were passing through the long street,
Now stopping, now proceeding.

மாயக் காரனாடி --கிருஷ்ணாரி
மகிமைக் காரனாடி-- ராமாரி
பூமி பாரம் தீர்க்க --கிருஷ்ணாரி
போர் நடத்தி வைத்தான் --ராமாரி
தூதுரைத்த தோழன் --கிருஷ்ணாரி
தோது சொல்லித் தந்தான் --ராமாரி
காடுறைந்த போதும்-- கிருஷ்ணாரி
கஷ்டம் போக்கிவிட்டான்-- ராமாரி
துயிலுரிந்த போதும்-- கிருஷ்ணாரி
துணையிருந்த வண்டி -- ராமாரி
தோற்று விட்ட தெல்லாம்-- கிருஷ்ணாரி
தோற்றுவிப்ப வண்டி-- ராமாரி

--He is the one of gramarye -- O Krishna!
--He is the one of grandeur -- O Rama!
--To lessen earth's burthen -- O Krishna!
--He conducted the War -- O Rama!
--He is the messenger and friend -- O Krishna!
--He is the one that gave them cues and clues -- O Rama!
--Even when they abode at the jungle -- O Krishna!
--He rid them of their troubles -- O Rama!
--When disrobing took place -- O Krishna!
--He was the aid and assistance -- O Rama!
--All things lost -- O Krishna!
--He will cause to reappear -- O Rama!

துணையிருப்ப வண்டி --கிருஷ்ணாரி
துணையை நாடுவானோ-- ராமாரி
சூதிருக்கு மோடி-- கிருஷ்ணாரி
சூதருக்குள் சூதன்-- ராமாரி
கலகம் வந்த துண்டோ-- கிருஷ்ணாரி
கவலை கொள்ளல் ஏனோ-- ராமாரி
வெள்ளம் போல சேனை-- கிருஷ்ணாரி
விசயன் கொண்டு போனான்-- ராமாரி
வென்று மீளுவானோ?-- கிருஷ்ணாரி
வில்லுங்கொண்டு போனான்-- ராமாரி
காளை வீமன் அன்றோ-- கிருஷ்ணாரி
கதையுங் கொண்டு போனான்-- ராமாரி
கண்ணன் எண்ணம் என்னோ?-- கிருஷ்ணாரி

கதை முடிய லாச்சு-- ராமாரி
யுகம் படைத்தவண்டி-- கிருஷ்ணாரி
யுகம் முடிக்கப் போறான்-- ராமாரி

He is the one who is the help -- O Krishna!
Will he seek help at all? -- O Rama!
Does this smack of stratagem? -- O Krishna!
He is the sovereign stratagist -- O Rama!
Was there, in sooth, any insurrection? -- O Krishna!
Why worry over it? -- O Rama!
An army immense as flood -- O Krishna!
Vijaya did lead - O Rama!
Will he return in triumph? -- O Krishna!
Arjuna did tote his bow -- O Rama!
Bhima is verily a bull -- O Krishna!
He took with him his mace -- O Rama!
What indeed doth Kannan intend? -- O Krishna!
The episode is coming to an end -- O Rama!
He is the Creator of the Yuga -- O Krishna!
Lo, He is to dissolve the Yuga -- O Rama!

பண்ணிசைக்கும் வேய்ங்குழலான் பார்த்தனுயிர்த் தோழன்
கண்ணன் அழைத்திடச் சென்ற காளை அருச்சுனனும்
எண்ணரிய புகழ் வீமன் ஏறனையான் உடனே
நண்ணியவர் திரும்புகின்ற நாளாகிப் போக
ஒரு குடையின் கீழிருந்து உலகாளும் வேந்தன்
தருமநெறி மணிமுரசம் தானதிரும் கொலுவில்
வீற்றிருந்த கொள்கையினில் விழைவில னாய்ப் பொன்னங்
கீற்றிசைந்த மந்திரமா மாளிகையுட் சென்றான்.

Days had rolled by when Arjuna, the bull,
The soul-mate of Kannan who is the wielder
Of the melodic flute, who visited Kannan at his invitation,
With Bhima the martial bull of thought-defying glory
Should have returned; but they hadn't.
The king of the world, seated beneath
A peerless umbrella, not desiring to occupy
Royally the throne in the durbar, where
The dharmic drum of beauty resounds,
Retired to his hall of privy council great; roofed of gold.

(2)

(சகாதேவனும் தருமனும்)

--அண்ணா வணக்கம் ... ...
--... ... வா சகாதேவா
--துவாரகைச் சேதி? ... ...
--தொன்மறை நாயகன்
எண்ணம் இதுவென எப்படித் தெரிவேன்?
--ஏதோ மாயம் இங்கிதில் உள்ளது.
--இருக்கலாம். ஆனால் என் செயக்கூடும்?
--கலகச் செய்தியும் கண்ணனால் அதனை
விலக்கிட இயலவில்லை யென்பதும் ...
--எல்லாம் புதிர்தான், ஏழையர் நாமே.
--ஏனோ பின்னர் இருவர் தம்மையும்
ஏகிடச் செய்தீர்? இன்னமும் திரும்ப
வில்லையே அண்ணா ... ...
--... ... வீண் சஞ்சலத்தால்
விளையும் பயன் என்? ... ...

(Sahadevan and Dharma)

--O brother elder, my obeisance to you.
-- ... You are welcome, Sahadeva.
--Any news from Dwaraka?
--How can I, for sure, know the intention
Of the Lord of the hoary Vedas?
--In this is some mystery
--May be.Yet what can we do?
--The news of insurrection and the inability
Of Kannan to forfend it ...
--Are but riddling; we are poor mortals.
--Why then did you bid the two to go?
They haven't as yet returned, O brother elder ...
--Of what avail is mere worrying?

--... ... விளைவதை அறிவேன்.
--அறிந்திடில் நானும் அறிந்திடக் கூறு.
--யுகம் முடிவென்னும் ஊழ்வினை உற்றது.
--உடையவன் ஒருவனே, உளனவன் கண்ணன்
உள்ளம் என்னவோ அதுவே ஊழ்வலி.

--உண்மைதான் அண்ணா! உலகெலாம் அவனே
உண்பான் உமிழ்வான் உமிழ்ந்ததை உண்பான்.
யாவும் அலகிலா அவன் விளையாட்டே.
--தோல்வியும் வெற்றியும் தோய்ந்திட நம்மைத்
தொல்லைகள் செய்ததும் தோழமை காட்டிப்
பாரத நாட்டிற் பரிவுடன் சோதரர்
வாழ்ந்த நாள் போக வாள்கொடு நம்மை
நாமே சாய்த்திட நாயகன் செய்ததும்
--மாபாரதமாய் மாயவன் புரிந்தான்.
--மற்றும் ஏதோ சூழ்ந்துளான் மாயம்.
--வருவது வரட்டும். வானவன் விருப்பம்
தடுத்து நாம் நிற்கத் தரமும் உண்டு கொல்!
--தடுக்கும் உரிமைதான் தந்துள்ளானா?

-- ...I know the outcome.
-- If you know, speak that I may also know.
-- The end of yuga is come. Destiny prevails.
-- The Lord-Owner is one only; He is Kannan;
That indeed is the mighty Fate which He wills.
-- O brother elder, It is true. He is all the worlds
That he will devour, disgorge and again devour.
All these are his boundless sport.
-- He troubled us by involving us in triumphs and failures;
When the days, during which the citizens of Bharat
Lived in brotherly harmony, ended
He caused us to fight with swords
And meet with our downfall!
-- The Lord of Magic wrought these of true epic grandeur.
-- He has again compassed some gramarye.
-- Come what may. Can we averruncate
The wish of the celestial One and yet survive?
-- Has he vested us with the right to avert it?

--எடுப்பான் பிடிப்பான் ஏற்றுவான் உயரக்
கொடுப்பான் பெரும் பதம். கொண்டவன் பாதம்
துணையெனப் போற்றித் துயரழிந்திருப்போம்.
--துரௌபதி எங்கே? துணை என நெஞ்சில்
தூய்ய சேவடியைத் தோய்த்தவள் இருப்பாள்,
அவளே மாண்பொருள் அறிந்தவள் அப்பா!

--தூயவன் பாதம் துணையெனக் கொண்டே
துயரொழிந்திட்ட தூய்மையின் பிழம்பு.
--நமக்கும் அவன் துணை யல்லால் கதியிலை.
--நான் வருகின்றேன்; நாமினும் காண்போம்.

-- He may seize, hold and hoist aloft;
He may confer on us the great beatitude; He owns us.
His feet are our help; let us hail them
And thrive, delivered from misery.
--Where is Draupadi? Embosoming His
Immaculate feet as sure help, she thrives
Ever abiding in them. She alone knows the Ens Entium.
--Holding fast to the feet of the pure One as sole help,
She, the flame of purity, thrives, rid of misery.
--We too have refuge none save His help.
--Let me go; we will wait and witness what ensues.

(3)

(துவாரகையில் கண்ணனும் பலராமனும்)

--கண்ணா, கண்ணா! ... ...
--... ... அண்ணா என்ன?
--இன்னுமா இன்னிசை ... ...
... ... ஈதுனக்கு அழகா?
--இன்னுமா என்றால்? என்ன நான் செய்ய?
--யாதவ குலத்தார் அழிவுறு கின்றார்.
ஒருவரை மற்றவர் ஒறுத்து மடிதல்
பார்த்துமா இன்னும் பாராமுகம் கண்ணா?
--பொறுப்பீர் அண்ணா, புத்திமை மறந்து
புடைத்தவர் தம்மைத் தாமே யழித்தால்
புகுந்திடை விலக்குதல் பொல்லாங் கன்றோ?
--நன்று நன்று நன்றுநின் கொற்றம்
நாடெலாம் நலிந்து நசித்திடும் வரையும்
நகை புரிந்திருப்பாய்; நான் சகித்திடவா?
--நான் செயக்கூடிய நற்செயல் இது தான்.
--நாயகன் இவ்விதம் நாடகம் ஆடினால்
நாட்டவர் துயரம்? நன்று நின் கொள்கை!
--தக்கது நடைபெறும் தருணமே காத்துத்
தமியேன் இன்னும் தயங்கிநிற் கின்றேன்.
--தாரணி மக்கள் தாமழி வுற்றபின்

தருணம் வருமுன் தயவும் கனியும்.
--தருணம் வந்தே தயங்கிநிற் கின்றேன்.
தருக்குடன் செருக்கும் தாமே அழியும்
தருணம் வந்தே தயங்கிநிற் கின்றேன்.
--என்றுமுன் போக்கே இதுதான். இனிமேல்
இங்கு நான் நில்லேன்; ஏகுவேன் என் வழி.
(பலராமன் வெளியேறுகிறார்)

(Kannan and Balarama at Dwaraka)

--Kanna, Kanna!
--What is it brother elder?
--Why are you still indulging in music?
Does this become you?
--If you ask me why, what can I do?
--The race of Yaadhavas is perishing;
They fight with one another; thus they perish.
How can you ignore this when you witness it?
--Brother elder, be patient!
Oblivious of wisdom, if the valiant destroy
One another, will it not spell evil
If intercession is essayed?
--Well, very well! Your reign indeed is very well.
You will smile and smile till the whole nation
Doth waste and perish. Am I to endure this?
--This is all that I can do.

-- If the sovereign ruler enacts such a play
Who will rid the misery of the subjects?
Great indeed is your creed!
--Awaiting the ordained hour, I -- the lone one --,
Still remain wavering.
--The awaited hour will come when
All our countrymen perish;
Then your mercy will bear fruit.
--Yes, I tarry as the time due has arrived;
I tarry unresolved as the time when
Pride and hauteur destroy each other, has come.
--Such is always your policy; henceforth
I will not tarry here; I'll pursue my way.
(Exit Balaraman)

—அண்ணா, அண்ணா! ... ...
... ... அய்யோ பாவம்
பண்ணார் வேய்ங்குழல் பாடுவதென் தொழில்.
(வீமார்ச்சுனர்கள் பிரவேசம்)

—கண்ணா, கண்ணா! ... ...
... ... அண்ணா என்னது?
—அர்ச்சுன அதுபார்! அறிதுயில் புரிவான்!
—ஆமாம் வீமா! அயர்வு போலும்.
(கண்ண பெருமான் வரவேற்றல்)
—யாரது அர்ச்சுனா? அன்பனே வாராய்.
—அண்ணன் வீமனும் அடியனும் வந்தோம்.
—வருவீர், வருவீர். வான்புகழ் கொண்டீர்
வருக. நும் வருகை நல்வர வாகுக.
—தூதன் வந்தான், துவாரகா புரியில்
யாதவர் கலகம் என்றுரை செய்தான்.

-- Brother elder, O brother elder! ... ...
... ... Alas, alas, pity it is.
My job is to breathe the melodic bamboo-flute.
(Enter Bhima and Arjuna)
--Kanna, Kanna! ... ...
--Brother elder, what may it be?
--Arjuna, look thither! He sleeps the mystic sleep!
--Maybe, he is fatigued.
(Lord Kannan welcomes them)
--Who is there? Is that Arjuna? Dear one, you are welcome.
--My elder brother Bhima and I have come.
--Come, come, O ye that had annexed glory,
Vast as sky; I bid you a warm welcome.
--The messenger came and informed us
Of the insurrection of the Yaadhavas at Dwaraka.

—ஆமாம் அப்பா. அதனை யான் அடக்குதல்
ஆகாதென்றே அன்புடன் நுமக்குச்
செய்தியனுப்பினேன் செயல் திறம் புரிவீர்!
நலந்திகழ் உங்கள் நாயகி மற்றும்
நாடெலாம் சுகமா? நல்லறம் ஒன்றே
நாட்டும் தொழிலே நாடிடும் தரும
நாயகன் செங்கோல் நலியா துளதா?

--யாவும் யாவரும் யாதவ நின்னருள்
போற்றி வாழ்கின்றோம். புதுமையாய் ஒரு சொல்
விடுத்தாய், எம்துணை வேண்டினாய் என்று.
விந்தையாம் இந்த விடுகதை. உண்மை
கண்டு வரவும் கட்டளை ஏற்றுக்
கடன் புரிந்திடவும் காதலால் விரும்பி
மாதவ, நின்னிடம் மன்னன் அனுப்பினான்.
--நல்லது, மகிழ்ந்தேன் நண்பர்காள்! உங்கள்
வில்லும் கதையும் விளைத்திடும் அச்சம்.
அதனால் யாதவர் அடங்குவர்; நாடும்
அமைதியில் ஆழும் என்றே அழைத்தேன்.

--Yes, dear one, in love did I send word to you
As I should not myself quell it.
You indeed are adepts in action.

Are your consort -- the one blessed with weal--,
And your nation doing well?
Does the sceptre of the Lord of Dharma
Who but pursues the work of upholding
The goodly dharma, flourish unflawed?
--All mankind and all beings hail your grace
And thrive well. You sent us a novel message
Which says that you seek our aid.
By love impelled, O Madhava, our King
Commanded us to place ourselves at your disposal
To get at the truth of this wondrous conundrum
And to do our duty in pursuance of your behest.
--Well, I feel happy, O friends! Your bow
And mace will strike terror.
Thus will the Yaadhavas be controlled.
The nation too will get poised in peace.
It is for this I bade you come.

--கண்ணபிரானே, கருணையங் கடலே,
என்ன பேச்சிது? ஈதெல்லாம் இந்த
ஏழைய ரிடமா? எந்தாய் வேண்டாம்.
--வெற்றுரை விளையாட்டன்று காண்; உங்கள்
வீரம் யானறி யாததா? எனக்கோ
உடல் நலம் குன்றி உள்ளத் திட்பமும்

உலைந்தது கண்டீர். உண்மையில் உங்கள்
உதவியே எனக்கு உறுதுணை யப்பா.
--கண்ணா உனக்கும் கவலைகள் உண்டோ?
களவெம் போரிடைக் கவலை யுற்றேனைக்
கருணையால் ஆண்ட கண்ணனே மற்றுங்
கவலுதல் என்றால், கவலையைத் தீர்க்க
வல்லவர் யாரோ?... ...
--... ... ... வல்லவன் நீயே.
--வல்ல பெருமான்! வல்லவன் நின்னினும்
யானென் றறைந்தாய். அடியன் நின் அடிமை.
--அர்ச்சுன, வீம, அன்பர்காள்! உங்கள்
அன்புளம் யானறி யாத தல்லவே.
அலைக்கழித் திடவோ அழைப்பேன்? அய்யோ
யாதவர் கூக்குரல் கேளீர் ...

--O Lord Kanna! O Sea of compassion!
What is it that you are saying?
Why this game that you play
Involving us--the poor ones--, in it?
No, no! O our Mother as well as Father!
--This isn't a game of empty talk; Aren't I
Aware of your heroism? My health has waned
And my inner strength is gone, you know.
Indeed your help alone is abiding help for me.
--Kanna, can you too suffer from worries?
When I was whelmed by distress
In the cruel field of battle, it was you
Who in mercy, retrieved me.
If that Kannan should grieve
Who then is valiant to quell his grief?
-- ... You indeed are the valiant one
-- O Almighty Lord! Are You telling me
I am more puissant than You--the Omnipotent?
I who hail Your feet am your slave.
--Dear ones, O Arjuna and Bhima!
I am not unaware of your loving hearts.
Is it to vex and weary you that I invited you?
Alas, hearken to the clamour of the Yaadhavas!

(ஆரவாரம் கேட்கிறது)

— ... ... நீவிர்
துவாரகா புரிநகர்ப் புறமே சென்று
யாதவர் கலகம் அமைவுறக் கண்டு
திரும்புவீர்; பின்னர் ஊர் திரும்பிடலாம்.
—ஆண்டவ நினது அடியோம்; ஆணை
சிரமேற் கொண்டு செல்லுவோம்; நினது
பதத்துணை போற்றிப் பரதர்தங் கோமான்
கட்டளைப் படியெங் கடன் புரிந்திடுவோம்.
என்றும் என் தோழனாம் இனியாய் கண்ணா
இன்றுமென் வில்லில் இருந்தருள் புரிவாய்.

(Uproar is afloat)

-- ... ... May you proceed
And station yourselves without the city
Of Dwaraka, witness calmly the riot
Of the Yaadhavas, quell it and return.
Then to your place you may go back.
--O Lord-Ruler, we are your servitiors; we will go
Wearing on our crown your mandate;
Hailing the help of your feet, we will
Our duty do as bidden by the King of Bharat.
O sweet Kanna, you are ever my friend;
This day too, abide in my bow and grace me.

--செல்லுமுன் ஒன்று செய்குவீர். முதலில்
அந்தோ பாரீர், ஆதரம் இன்றி
எழுந்து நடக்கவும் இயலா தவனாய்
இங்கே கிடப்பேன் என்னரும் தோழர்காள்.
இப்படி என் மருங் கிருபுறம் வருவீர்.
கைகொடுத் தென்னைக் கட்டிலில் அமர்த்திக்
கலாம் விளைத்திட்ட களம்புகுந் தெனக்காய்க்
காதல் உரிமையைக் காட்டுவீர். உமக்குக்
கைம்மா றியற்றக் கருதவும் இயலாக்
காலமும் வந்ததே! கடிய வெவ்விதி தான்.

--I will tell you what. Before you proceed,
Alas this you behold first! My rare friends,
I lie here unable to get up and walk.
I have support none. May you two come to my sides.
Stretch your hands and seat me on the cot.
For my sake and in love, enter the field
Where riot takes place and exercise your privilege.
Lo, time is come when I cannot even
Think of requiting you; for sure,
This is Destiny at once strong and cruel.

(வீமார்ச்சுனர் தமக்குள்)

--அர்ச்சுனா என்ன ஆபத் தப்பா!
--அண்ணன் இப்படி வருமென் றெண்ணியே
அன்புடன் நம்மை எச்சரித் துள்ளார்.
களவீரன் பார்த்தனுடன்
கதை யேந்தும் வீமனுமே
களக்கமுற்று நிற்பதனைக்
கண்ணபிரான் கண்டு கொண்டான்.
கொளக் கருதி அவர் வலிமை
குறைத்திடுநற் கொள்கையினான்.
விளங்காத முறுவலினான்
விளம்பிய சொல் இதுவாகும்.
--என்ன தயக்கம்? என்னைத் தொடவும்
கூடா தென்றகொள்கையா? அன்றிக்
கோமகன் உமக்குக் குறித்ததும் இதுவா?
வீமார்ச் சுனர்காள், வீரர்காள், உங்கள்
நண்பன் யானிங்கு நலிவுற் றிருத்தல்
கண்டீர் அன்றோ? கணப்பொழு தெனக்குக்
கைகொடுப் பதற்குக் காலதா மதமேன்?
இச்சிறு துணை எனக்கு இயற்றத் தயங்குவர்
என்னரும் தோழர் என்பதை அறிந்திலேன்.

(Bhima and Arjuna between themselves)

--Arjuna, what imperilment is this?
--Our elder brother had in love, warned us
That it might happen even thus.
Of the martial hero Arjuna

And Bhima who wields the mace.
He willed to whittle down their strength;
That indeed was by him intended.
He is the one of inscrutable smile.
These are the words he spoke to them.
--Why this reluctance at all? Have you resolved
Not to touch me at all? Or is it thus
You had been advised by your King?
O Bhima and Arjuna! O heroes! Haven't you
Witnessed the feckless plight of your friend?
Why this delay to extend for a mere second
Your hands? I have not known that my friends
Would ever feel reluctant to extend
This small help unto me.

--அப்படி யொன்றும் அகந்தையால் அன்று
அருமைக் கண்ணா.
--... ... ஆமாம் கண்ணா
ஆணைப்படியாம் ஆயிரங் காதம்
கடந்து வந்ததால் ... ...
--... ... கருத்தும் சரிதான்.
தூய்மைக் குறைவுடன் தொடக் கூடாதெனத்
தூரநீர் விலகித் தொல்லைப் பட்டீர்
என்பதை அறியா திருந்து விட்டேன்.
பாதக மில்லை பார்த்தா, வீமா!
பக்கம் வருவீர் பரிவுடன் என்பால்.
காளை அருச்சுனன் காண்டிபம் தருக;
வீமா! நீ கதை வீக்கிப் பிடிப்பாய்,
யானே அவற்றை இறுகப் பற்றி
மெதுவாய் எழுவேன். மேலும் ஏன் தயக்கம்?
(தனித்து அருச்சுனனிடம்)
--வேறு வழியிலை தம்பீ ...
--... ... ... அண்ணா
மறுத்தால் மாதவர்ப் பிழைத்தவ ராவோம்.
--மற்றவன் நன்றி கொன்றவர் ஆவோம்.
கண்ணன் பால்உன் காண்டிபம் தருக.
--மற்றொரு பால் உன் மாகதை அளித்திடு.
--மாதவன் அருளே வாழ்வு நமக்கு.
--வரப் பிரசாதம் வருவது வரட்டும்.

--O Kanna, the rare One! This is not at all
Owing to (our) arrogance.
... ... Yes Kanna!
As we have come here covering
A thousand leagues, at the behest of ...
-- ...Well, what you think is but proper.
I was truly unaware of the fact
That you are in a quandary,
Since you desire not to touch me
In your state of pollution.
It matters little, O Arjuna and Bhima!
Come close to me in loving kindness.
May Arjuna -- the bull, extend to me his Gaandivam;
You Bhima! Hold aloft your mace.
I myself will hold them tight and rise slowly.
Why do you feel reluctant still?
(Bhima whispers to Arjuna)
--Brother younger, it is no go.
... ... O brother elder, if we refuse
We will be sinning against Maadhava.
--Moreover, we will turn ingrates.
--Extend your Gaandivam to Kannan.
--Extend your mighty mace to his other hand.
--His grace indeed is our life.
--Boon or bane! Come what may!

(4)

(மீண்டும் இந்திரப்பிரஸ்த அரண்மனையில்)

--வருவது வரட்டும் வாராய் திரௌபதி!
--ஒரு பதினாறு உருட்டுவீர் காயை.
--வென்றேன் என்றால் வெற்றுரை தருமன்
ஒப்பிடான் பெண்ணே; உன்னிடம் வைக்க
உறுபொருள் உளதேல் உடன் அது கூறு.
--விளையாட்டிற்கும் வேண்டுமோ பணயம்?
--விளையாட் டெனினும் வினையாட் டெனினும்
வேந்தர்கள் சூது வெறும் பேச்சாமோ?
--வேற்றவை தன்னில் மேலைநாள் நம்மைப்

பரிசழித் திட்ட பாதகச் சூதிது
பொல்லாங் கன்றோ? போகிறேன் வேண்டாம்.
--போகா தேநீ போகலாம் இரு இரு.
--போதா யிற்றுப் போதுமே நாதா.
--போதா னால்என்? போகலாம் நில்லு.
--போங்கள் நல்ல பித்தம் உமக்கு.
--ஆட்டம் முடிய வில்லையே அன்பே.
--ஆடிமுன் பட்ட அவதிகள் மறந்தீர்.

(In the palace of Indraprasta)

--Come what may! Come here Draupadi.
...Please roll the dice to secure 'Sixteen'.
--If I win, know that Dharma cannot be
Appeased by empty words. If you have
With you anything of value
Declare that forthwith as the wager.
--Is wager necessary even in a game?
--When sovereigns play the game phenomenal
Or the game of destiny, gambling is not
Done with mere words.
--Of yore, this gambling fraught with blame
Annulled our honour in an alien court.
Is this not evil? No, let me go.
--Stay, stay; don't go; you may go later.
(They continue the play)
--Enough, it is time to stop, O my lord!
--Does time matter at all?
You can go later; stay.
--Leave this. You are in a fine frenzy.
--The game is not over, my beloved.
--You have forgot the troubles of your former gambling.

--என்ன பேச்சிது? எதற்கோ இந்த
இன்ப வேளையில் இன்னல் நினைப்பு?
--இல்லை நாதா என்னவோ இன்று
என்னுளம் சஞ்சலம் எய்துகின்றது.
--சஞ்சலம் என்று சதுராய்ப் பேசிச்
சமயம் பார்த்து நழுவுகின்றாயே!

--நாதா உண்மையாய் நங்கை என் உள்ளம்
நடுங்குகின்றது ... ...
--... ... ... நடுக்கமேன் கண்ணே?
--துவாரகை சென்ற துணைவரை எண்ணித்
தமியாள் கணந்தொறும் தவித்திருக்கின்றேன்.
--தொல்லைப் படுமென் உள்ளமும் தொல்லை
மறந்திடத் தான் இம் மாற்றம் கண்டேன்.
--நல்லது பணயம் நவிலவா?...
--... ... ... நவில்க.
--மன்னவர் தோற்றால் மண்டலம் முழுவதும்!
--உனக்கே உரிமை. ஒப்பினேன் ஆடு.

--What words are these? Why think of misery
At the hour of merriment?
--No, my lord! Somewhat this day
My heart is by worry assailed.
--You speak cunningly of worry
To give me the slip, well-timing it.
--My lord, truly my woman's heart
Is quaking.
--Why this trembling, my dear?
--Thinking on the life-partners gone to Dwaraka
I, the lone one, am suffering each moment.
--My mind too is troubled; it is to forget
This trouble, I resorted to this.
--Well, shall I declare the wager?
-- ... ... Do it.
--If the king loses, all the empire ...
--Is yours; I agree; play.

--இல்லை, இல்லை, எனக்கேன் ஆட்சி?
காய்கள் உருட்டிக் காவலர் தோற்றால்
கொற்றவெண் குடையும் குவலயத் தாட்சியும்
கண்ண பிரானின் கழலிணை சேர்க.
--மற்று நீ தோற்றால் ... ...
--... ... ... மன்னவர் விருப்பம்
ஏதாயினும் அது ஏற்பேன் அடிமை.
ஆட்டம் இத்துடன் அமைவதே போதும்.
--எப்படிப் போதும்? இன்னும் இங்கே

எத்தனை ஆட்டம் ஆடிட வேண்டுமோ?
ஆடுக பகடை ... ...
... ... ஆநான் தோற்றேன்.

--No. no. Why should I seek suzerainty?
If the ruler rolls the dice and loses,
The triumphal, white umbrella
And the reign of the world
Must to the feet of Kannan belong.
--If you lose ... ...
--Whatever be the wish of the King
To that I will yield; I am your slave.
It is better, the game ends here.
--How can that be? I know not
How many rounds we should play.
Roll the dice ... ...
-- ... Alack a day! I have lost.

(வீமார்ச்சுனர் வருகை)

--ஆம்திறல் அழிந்தோம்! ... ...
--... ... அர்ச்சுனா! வீமா!
--ஆமாம், நாங்கள் தாம் ... ...
--... ... ... அய்யோ! ஈதென்?
அருள்பொழி வதனம் அடர்ந்ததேன் இருளாய்?
அர்ச்சுனன் முகமா? அது யார் வீமனா?
--ஆமாம் அண்ணா, அதுதான் முடிவு.
--காண்டீபம் எங்கே? வீமா நின் கதை?
விளம்புவாய் பார்த்தா; விம்முதல் வேண்டாம்.

(The advent of Bhima and Arjuna)

--Yes, our valiancy stands annulled. ...
... ... O Arjuna! O Bhima!
--Yes, it is we; truly it is we ... ...
-- ... ... Alas, what may this be?
Why is the grace-abounding visage
Grown densely dark? Is this the face of Arjuna's?
Who is that? Is that indeed Bhima?

--Yes, brother elder! Truly this is the end.
--Where is the Gaandivam? Bhima, where is your mace?
--Arjuna. tell me what happened. Do not sob.

--அண்ணா துவாரகைக்கு அனுப்பினீர் அன்றோ?
--கண்ணபிரான் கழலிணை சுகமா!
--என்ன நான் இயம்ப? என்னுயிர்க் குயிராம்
மாயக் கண்ணன் மறைந்தனன் அண்ணா!
--தம்பீ, என்ன தலைமேல் இடியா?
--உலகப் பேரிடி. உண்மை; எங்கள்
உடைமைகள் யாவும் உடன் கொண்டு போனான்.
--கதையும் அந்தக் காண்டிவ வில்லும்
கண்ணன் கரத்தால் காதலால் பற்றி
எழுந்தனன் அண்ணா; எழுந்ததும் எங்கள்
தோள்வலி யவன்பால் தோய்ந்து மறைந்தது.
--காண்டிவ வில்லைக் கையால் பற்றவும்
வலிமை என்பால் வற்றிடக் கண்டேன்.
--கதையை அசைக்கவும் கைவலிப் பதனைக்
காண நான் அழிந்தேன்; கனவாய் முடிந்தது.

--Brother elder, did you not send us to Dwaraka?
-- ... ... Are they -- the ankleted feet
Of Lord Kannan --, poised in weal?
--What shall I say? O brother elder!
The life of my life, the Maayic Kannan
Has disappeared.
--O brother younger, has the bolt from the blue
Struck my head?
--Yes, it is a fulmen, foudroyant and cosmic!
Of a truth, he took with him all we owned.
--Brother elder. in love did Kannan hold
With his hands the mace and the Gaandivam
And rose up; as up he rose, the valour
Of our arms flew into him and vamoosed.
--My energy drained, I cannot even hold
With my hands, the bow that is Gaandivam.
--It pains my hands even to move my mace;
I am undone; it ended like a dream.

--எங்கள் கனவின் இறுதியில் கண்ணன்
எழுந்தனன் போனான் என்பதும் கேட்டோம்.
--கேட்ட மறுகணம் கேட்ட தோர் செய்தியைக்
கூறிட நெஞ்சம் குமுறு கின்றது.
--மாதவன் சென்று மற்றவர் பூசல்
மாற்றியே ஆங்கோர் மரநிழல் வீற்று
ஆறுதல் கொள்ள அமர்ந்த வேளையில்
கண்ண பிரானின் காற் பெருவிரலிற்
கணையொன் றெங்கோ கதுமெனப் புகுந்து
காலம் முடிந்தது, கலகமும் ஓய்ந்தது.
--ஓய்ந்தது உலகின் ஒரு பெரும் நாடகம்;
ஓடோடி வந்தோம் ... ...

--At the end of our dream, we heard
That Kannan rose up and went away.
After what we had heard thus,
The news we heard the very next moment
Causes our hearts to rumble, should we disclose it.
--Maadhava fared forth and quelled the riot;
Then when he rested in the shade of a tree,
On a sudden flew an arrow from somewhere
And pierced the big toe of Lord Kannan's.
Lo, (his) time ended; so too the riot.
--Thus ended the unique cosmic play.
Running in all celerity, we have come here.

--... ... ... ஓஹோ! உலகை
ஊதி நிறைத்தவன், உடைமைகள் யாவும்
உடன் கொண்டு சென்றான். உண்மைக் கருத்தை
உணர்த்திய வாறே உணர்வோம் நாமும்.
உடையவன் நம்மை உடன் அழைக்கின்றான்.
உலகில் நல்லறம் உறுதியாய்க் காட்டி
ஒரு பெரும் திரையில் ஓவியம் தீட்டி
உலகில் மாந்தர் உவத்தலும் காய்தலும்
ஒழித்தவன் அருளே உளத்திற் கொண்டு
ஒழுகுதல் கடனென உணர்த்தினான். அந்த
உண்மை உலகிற் குணர்த்திநம் வாழ்வை
முடித்துக் கொள்வோம். முழு முதல் வாழி.

--Ha! He blew the world into shape and filled it.
He had taken with him all he owned.
Let us cognise the truth in unison
With his instruction;
The Lord-Owner bids us follow him.
He revealed, for certain, the true dharma,
He did paint it in one vast canvas;
He had driven home the truth that men on earth
Should live unaffected by likes or dislikes,
Ever embosoming his grace.
Let us proclaim to the world that Truth
And conclude our life.
Hail the perfect One -- the Absolute.

யுகம் முடிந்து போயிற்றென் றுணர்ந்து கொண்ட
யுதிட்டிரனா தியர் உடனே வானம் சென்றார்.
இகல் வென்ற பாண்டவரின் காலத் தோடே
இப்புவியில் கலிபிறந்தான். கண்ணன் காட்டும்
வழியொன்றே வாழ்வாங்கு வாழ்வித் திந்த
வையகத்தை வானகமாய்ப் புரியு மென்றே
தொழுதுபுகழ் பாட்டெழுந்து தொலைவில் கேட்கும்
தொல்லுலகில் உடையவனைத் துணையாய்க் கொண்டே.
(தொலைவிலிருந்து வரும் குரல்)
மாயக்காரனாடி --கிருஷ்ணாரி
மகுமைக்காரனாடி-- ராமாரி.

Realizing that the Yuga had ended, Yuthishtra
And his kin forthwith fared forth heavenward;
With the passing away of the Paandavas
Who triumphed in the war,
Kali made his advent on this earth.
"It is only the way revealed by Kannan that can
Cause the thriving of the cosmos as it should
And transform it into very heaven."
Thus is heard from at a distance
A glorious hymn of solemn strain.
(The voice from the distance)
He is the one of gramarye -- O Krishna!
He is the one of grandeur -- O Rama!

--Ha! He blew the world into shape and filled it.
He had taken with him all he owned.
Let us cognise the truth in unison
With his instruction;
The Lord-Owner bids us follow him.
He revealed, for certain, the true dharma,
He did paint it in one vast canvas;
He had driven home the truth that men on earth
Should live unaffected by likes or dislikes,
Ever embosoming his grace.
Let us proclaim to the world that Truth
And conclude our life.
Hail the perfect One -- the Absolute.

யுகம் முடிந்து போயிற்றென் றுணர்ந்து கொண்ட
யுதிட்டிரனா தியர் உடனே வானம் சென்றார்.
இகல் வென்ற பாண்டவரின் காலத் தோடே
இப்புவியில் கலிபிறந்தான். கண்ணன் காட்டும்
வழியொன்றே வாழ்வாங்கு வாழ்வித் திந்த
வையகத்தை வானகமாய்ப் புரியு மென்றே
தொழுதுபுகழ் பாட்டெழுந்து தொலைவில் கேட்கும்
தொல்லுலகில் உடையவனைத் துணையாய்க் கொண்டே.
(தொலைவிலிருந்து வரும் குரல்)
மாயக்காரனாடி --கிருஷ்ணாரி
மகுமைக்காரனாடி-- ராமாரி.

Realizing that the Yuga had ended, Yuthishtra
And his kin forthwith fared forth heavenward;
With the passing away of the Paandavas
Who triumphed in the war,
Kali made his advent on this earth.
"It is only the way revealed by Kannan that can
Cause the thriving of the cosmos as it should
And transform it into very heaven."
Thus is heard from at a distance
A glorious hymn of solemn strain.
(The voice from the distance)
He is the one of gramarye -- O Krishna!
He is the one of grandeur -- O Rama!